




கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் 2016-ஐ முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (24.09.2016) நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. ஹெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 672/2016 24.09.2016

**கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் 2016-ஐ முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஊரக உள்ளாட்சி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி இன்று (24.09.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் 2016-ஐ முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஊரக உள்ளாட்சி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (24.09.2016) நடைபெற்றது.

பயிற்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

ஏற்கெனவே நடைபெற்ற பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தலுக்கும் தற்போது நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலுக்கும் சில வித்தியாசங்கள் உள்ளது, அதாவது எடுத்துக்காட்டாக ஊராட்சி அளவிலான பதவிகளுக்கு தேர்தல் நடத்தப்படும். இன்று நடைபெறும் பயிற்சியில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தேர்தலின்போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.

குறிப்பாக வேட்புமனு தாக்கல் செய்யும்போது, வேட்பாளர்கள் போட்டியிடும் பதவிக்கான தகுதி, வைப்புத்தொகை, அவர்களது வயது வரம்பு, இருப்பிட முகவரி, வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். அதற்கு கட்சி அடிப்படையிலான ஊரக உள்ளாட்சி தேர்தல் (மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்க்கு) நியமனம் செய்யப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு பயிற்சி இன்று காலை அளிக்கப்பட்டது. மேலும் கட்சி அடிப்படையில் அல்லாத ஊரக உள்ளாட்சி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு பயிற்சி பிற்பகல் (கிராம ஊராட்சி தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்) நடைபெற இருக்கிறது. மேலும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட கையேடினை தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நன்றாக படித்து தெரிந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பயிற்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. ஹெட்சி லீமா அமலினி, மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியாளர் (தேர்தல்) திரு. முகம்மது உமர், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.